MCOP. 127/2020

Dated : 03.10.2024

P.W- 1 சாட்சி ராஜா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை.

<u>**2** ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை**:-**</u>

1) முதல் மனுதாரர் என் தாயார். இழப்பீடு மனு தாக்கல் செய்யும் போது அவர் உயிருடன் தான் இருந்தார். எனது தம்பி கனகராஜன் இறந்தற்காக இழப்பீடு மனு தாக்கல் செய்யப்பட்டது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விஜயகுமார் மூலம் கேள்விப்பட்டேன். விபத்து நடந்த சாலை வாழப்பாடியில் இருந்து ஆத்தூர் வரும் சாலை. அதில் மேற்கு திசையிலிருந்து கிழக்கு திசையை நோக்கி வரும் போது விபத்து காலை சுமார் 11.00 மணிக்கு விபத்து ஏற்பட்டது.

2) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-1 முதல் தகவல் அறிக்கையில் அதே திசையில் சென்ற TN 14 A 0807 என்ற நெல் அறுக்கும் வாகனத்தை வலது பக்கமாக முந்தி செல்லும் போது விபத்து ஏற்பட்டு உள்ளதாக சொல்லப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் என் தம்பி சென்ற இரு சக்கர வாகனத்தின் பின் புறமாக வந்து மோதியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 சட்ட மாறுதல் அறிக்கையில் என் தம்பி ஓட்டி சென்ற Hero Honda மோட்டார் சைக்கிள் பின்புறத்தில் சென்று மோதியதாக முன்னுக்கு பின் முரணாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) மேற்படி என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலமானது ம.சா.ஆ.1 மற்றும் 2 விபத்து நடந்த விதத்தை பொருத்து முன்னுக்கு பின் முரணாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 மற்றும் 2 ல் தேசிய நெடுஞ்சாலை நடுவில் உள்ள தடுப்பு சுவரில் மோதி தலை காயம் ஏற்பட்டதாக தான் சொல்லப்பட்டுள்ளதாக, தூக்கி ஏறியப்பட்டதாக சொல்லப்படவில்லை. எனது தம்பி கனகராஜ் மீது மோதி வண்டியின் எண். TN 14 A 0807 என்று சொன்னால் அது தவறு. TN 16 A 0807 ஆகும்.

4) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-1 ல் TN 14 A 0807 என்று உள்ளது என்றும் நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் TN 16 A 0807 என்றும் உள்ளது என்றால் வண்டி எண். TN 16 A 0807 என்பதே சரி. நான் தாக்கல் செய்துள்ள குற்ற பத்திரிக்கையிலும் TN 14 A 0807 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் மேற்படி கேள்விகளை பொருத்து மனுதாரர் தரப்பில் மேற்படி விவர குறிப்புகள் சம்பந்தமாக எதிர் உரையில் எதுவும் சொல்லப்படவில்லை என்றும் அது குறித்து கேள்வி கேட்க முடியாது என்றும் ஆட்சேபணை எழுப்பட்டது. அது குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்து பின்னிட்டு முதல் விசாரணையில் வண்டி எண் பொருண்மை மாறுபாடு உள்ளது என விளக்கம் கொடுக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்களும் ஏற்க்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது. அதை பற்றி தெரியவில்லை என சாட்சி சொல்கிறார்.

5) விபத்து ஏற்பட்ட உடன் வாழப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அரசு மருத்துவமனைக்கு விபத்து நடந்த இடத்தில் இருந்து ஆம்புலன்சில் TN 52 S 3524 என்ற வாகனத்தில் கொண்டு சென்றார்கள். அவ்வாறு சென்றபோது மேற்படி ஆம்புலன்ஸ் வாழப்பாடி சுடுகாட்டு அருகில் போகும் போது TVS XL Heavy Duty TN 77 E 2035 என்ற இரு சக்கர வாகனத்தில் மோதி பிறகு மேற்படி ஆம்புலன்ஸ் TN 52 W 7141 என்ற லாரியின் மோதி பிறகு சாலையின் வடக்கு பக்கம் ஆம்புலன்ஸ் நின்றது என்றால் சரிதான்.

6) என் தம்பி எடுத்து சென்ற ஆம்புலன்ஸ் வாகனத்தின் காப்பீட்டுதாரர், மற்றும் மோதிய இரு சக்கர TVS XL Heavy Duty TN 77 E 2035 வாகனத்தின் காப்பீட்டுதாரர் மற்றும் ஆம்புலன்ஸ் மீது மோதிய TN 52 W 7141 என்ற லாரியின் வாகனத்தின் காப்பீட்டுதாரர் ஆகியவற்றை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் முதல் விபத்து ஏற்பட்ட போது என் தம்பி உயிருடன் தான் இருந்தார் என்றும், ஆம்புலன்சில் சென்ற பின்னிட்டு ஏற்பட்ட

விபத்தால் தான் என் தம்பி இறந்தார் என்பதால் என் தம்பி இறந்ததற்க்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனம் பொருப்பல்ல என்றும் மேற்படி ஆம்புலன்சின் மீது மோதி இரு சக்கர வாகனம் மற்றும் லாரி உரிமையாளர் மற்றும் காப்பீடுதார்கள் மீது தான் இழப்பீடு கோர முடியும் என்றால் சரியல்ல.

7) இந்த விபத்தில் முதல் விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு ஆதாரங்கள் ஏதும் இல்லாத நிலையில் இரண்டாவதாக மோதி விபத்து ஏறப்படுத்திய ஆம்புலன்ஸ் மற்றும் இரு சக்கர வாகனம் மற்றும் லாரி ஆகியவர்கள் மீது தான் நஷ்டயீடு கோர முடியும் என்றும் 2ம் எதிர்மனுதரார் மீது இழப்பீடு கோர முடியாது என்றும் எனவே 2ம் எதிர்மனுதாரர் எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

8) நான் தாக்கல் செய்துள்ள முதல் பிரமாண பத்திரத்திலும், ம.சா.ஆ-2 சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையிலும் விபத்து காயம் பட்ட என் தம்பியை வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்த என்று தான் சொல்லிப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தம்பி ஆம்புலன்சில் செல்லும் போது உயிருடன் தான் இருந்தார். சாட்சி பின்னிட்டு ஆம்புலன்சில் இருந்து இரண்டாவது விபத்திற்கு பிறகு வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது சுயநினைவு இல்லாமல் உயிருடன் தான் இருந்தார் என்று சாட்சி சொல்கிறார். என் தம்பி முதல் விபத்தில் ஏற்பட்ட காயங்களில் தான் சாக வில்லை என்றும் இரண்டாவது விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. முதல் விபத்தினால் இறந்தார் என்பதற்காக ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9) என் தம்பி விபத்து சமயத்தில் வண்டி ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வாகன விபத்து ஆய்வு அறிக்கையில் எனது தம்பி ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடு சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகன விபத்து ஆய்வு அறிக்கை எ.மா.ஆ.1. விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் ஆனது என் தம்பி பெயரில் இ ல்லை என்றால் சரிதான். அது விமலா

என்பவர் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி இரு சக்கர Hero Honda வண்டிக்கு காப்பீடு இல்லை என்றால் அது பற்றி தெரியாது. என் தம்பி கனகராஜுக்கு திருமணம் ஆகவில்லை. விபத்து சமயத்தில் என் தம்பியின் வயதை நிரூபிக்க கூடிய ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

10) விபத்து சமயத்தில என் தம்பி வாட்டர் டேங்க் ஆப்ரேட்டர் மற்றும் பூ வியாபாரம் என்று சொல்லி உள்ளதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தம்பி அரசாங்க வேலையில் இல்லை. கான்டிராக்ட் வேலையில் தான் இருந்தார். அதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மாதம் ரூ.25,000/- சம்பளம் வாங்கினார் என்று சொல்வதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இறந்து போன என் தம்பிக்கு என் தாயார் ஆராயி மட்டுமே வாரிசு என்றும், நான் திருமணம் ஆகி சென்று விட்டதால் நான் என் தம்பிக்கு வாரிசு கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

11) என் தாயார் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். இந்த விபத்திற்கு என் தம்பியும் அஜாக்கிரதையால் வாகனம் ஓட்டியதால் தான் ஏற்பட்டது என்றும் மேலும் 2 வதாக ஏற்பட்ட விபத்தினால் தான் என் தம்பி இறந்தார் என்றும் அதற்கு முன் விபத்து ஏற்படுத்திய வாகனம் பொருப்பல்ல என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**